©
தமிழ் நாடு அரசு
2014

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 5.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 39]

சென்னை, புதன்கிழமை, அக்டோபர் 15, 2014
புரட்டாசி 29, ஜய, திருவள்ளுவர் ஆண்டு–2045

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

### அறிவிக்கைகள்

*[அரசாணை (நிலை) எண். 124, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 12 ஏப்ரல் 2013.]*

1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவளிப்பு நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1958) 3ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (3)–இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், நாகப்பட்டினம், வேளாங்கண்ணி தேவாலயத்தால் நடத்தப்படுகின்ற சிற்றுண்டிச்சாலைக்குக் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு, மேற்சொன்ன சட்டத்தின் அனைத்துச் சட்டப்பிரிவுகளிலிருந்தும், இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுகின்ற நாள், மற்றும் அன்றிலிருந்து மூன்று வருடங்களுக்கு, இதனால் விலக்களிக்கிறார். அவையாவன:–

(1) இளைஞர்களாக இருப்பின், அவர்களின் தினசரி வேலை நேரம் எந்தவொரு நாளிலும் ஏழு மணி நேரத்துக்கு அதிகமாக இருக்கக்கூடாது.

(2) ஏனையோர்களைப் பொறுத்தவரையில் அவர்களின் தினசரி வேலை நேரம் எந்தவொரு நாளிலும் ஒன்பது மணி நேரத்துக்கும், எந்தவொரு வாரத்திலும் நாற்பத்தெட்டு மணி நேரத்துக்கும் அதிகமாக இருக்கக்கூடாது.

(3) பணியாளர்களுக்கு சுழற்சி முறையில் வாராந்திர விடுமுறை அளிக்கப்பட வேண்டும்.

(4) பணியாளர் எவரிடமிருந்தேனும் மெய்த்தன்மை மிக்க புகார் வரப்பெறுமெனில் இந்த விலக்களிப்பு இரத்து செய்யப்படும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*மொழி பெயர்ப்பு, தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தித் துறை.*

*[அரசாணை (2D) எண். 32, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 29 மே 2013.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1958) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி மற்றும் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 16–08–2000 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** பாகம் II—பிரிவு 2–ல் 424 மற்றும் 425 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/927/2000 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையினை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாக, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் விசைத்தறித் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளைச் செய்கிற தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிக்கை, *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

*விவர அட்டவணை*

**விசைத்தறித் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* (1) | *பணிகள்/பணியாளர்களின் வகை* (2) | *குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (ரூ. காசு)* (3) |
|---|---|---|
| **நெசவாளரின் பருத்தி** | | |
| 1 | ஊடு 36 | மீட்டர் ஒன்றுக்கு 0.90 |
| 2 | ஊடு 40 | மீட்டர் ஒன்றுக்கு 1.00 |
| 3 | ஊடு 42 | மீட்டர் ஒன்றுக்கு 1.00 |
| 4 | ஊடு 44 | மீட்டர் ஒன்றுக்கு 1.00 |
| 5 | ஊடு 46 | மீட்டர் ஒன்றுக்கு 1.00 |
| 6 | ஊடு 48 | மீட்டர் ஒன்றுக்கு 1.20 |
| 7 | ஊடு 50 | மீட்டர் ஒன்றுக்கு 1.20 |
| 8 | ஊடு 52 | மீட்டர் ஒன்றுக்கு 1.20 |
| 9 | ஊடு 56 | மீட்டர் ஒன்றுக்கு 1.35 |
| 10 | ஊடு 60 | மீட்டர் ஒன்றுக்கு 1.40 |
| 11 | ஊடு 64 | மீட்டர் ஒன்றுக்கு 1.60 |
| 12 | ஊடு 68 | மீட்டர் ஒன்றுக்கு 1.70 |
| 13 | ஊடு 70 | மீட்டர் ஒன்றுக்கு 1.75 |
| 14 | ஊடு 44 வேட்டிகள் | மீட்டர் ஒன்றுக்கு 1.05 |
| 15 | ஊடு 52 வேட்டிகள் | மீட்டர் ஒன்றுக்கு 1.35 |
| 16 | ஊடு 56 வேட்டிகள் | மீட்டர் ஒன்றுக்கு 1.60 |
| 17 | ஊடு 68–72 (சிறப்பு வேட்டிகள் – இரட்டைத்தறி) | மீட்டர் ஒன்றுக்கு 2.65 |
| | (சிறப்பு வேட்டிகள்–ஒற்றைத்தறி) | மீட்டர் ஒன்றுக்கு 6.75 |
| 18 | முரட்டு ரக படுக்கை விரிப்புகள் 36–40 | மீட்டர் ஒன்றுக்கு 2.45 |
| | சாதா முரட்டு ரக படுக்கை விரிப்புகள் 36–40 வண்ணங்கள் (டிசைன்) | மீட்டர் ஒன்றுக்கு 3.15 |
| 19 | டிரில் ரகங்கள் 31, 36, 38, 38–40 ஊடுகள் | மீட்டர் ஒன்றுக்கு 1.90 |
| 20 | டெர்ரி ரகங்கள் 60, 28, 30, 32 ஊடுகள் | மீட்டர் ஒன்றுக்கு 4.20 |

| தொடர் எண் | பணிகள்/பணியாளர்களின் வகை | குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (ரூ. காசு) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 21 | ஜாக்குவார்டு ரகங்கள் 48, 54, 60–32, 32 ஊடுகள் | மீட்டர் ஒன்றுக்கு 4.20 |
| **II. செயற்கை இழை** | | |
| 22 | ஊடு 36 சாதா | மீட்டர் ஒன்றுக்கு 1.40 |
| 23 | ஊடு 56 ஜாரி | மீட்டர் ஒன்றுக்கு 1.75 |
| 24 | ஊடு 36 கோத்தாரி | மீட்டர் ஒன்றுக்கு 2.05 |
| 25 | ஊடு 36/44 நாக்பூர் கோத்தாரி | மீட்டர் ஒன்றுக்கு 2.40 |
| 26 | ஊடு 36 ஜாக்குவார்டு | மீட்டர் ஒன்றுக்கு 2.45 |
| 27 | ஊடு 36/42 வேட்டி | மீட்டர் ஒன்றுக்கு 1.75 |
| 28 | ஊடு 36/52 வேட்டி | மீட்டர் ஒன்றுக்கு 2.10 |
| 29 | ஊடு 36/56/60 வேட்டி | மீட்டர் ஒன்றுக்கு 2.65 |
| 30 | ஊடு 36 முதல் 38 புடவை ரகங்கள் | மீட்டர் ஒன்றுக்கு 2.40 |
| 31 | ஊடு 36/40 புடவை ரகங்கள் | மீட்டர் ஒன்றுக்கு 2.40 |
| 32 | ஊடு 36/42 மென் புடவை ரகங்கள் | மீட்டர் ஒன்றுக்கு 2.75 |
| 33 | ஊடு 36/42 செயற்கைப் பட்டு | மீட்டர் ஒன்றுக்கு 3.50 |
| 34 | ஊடு 52/56 செயற்கைப் பட்டு | மீட்டர் ஒன்றுக்கு 3.85 |
| **III. இதர பணியாளர்கள்** | | |
| 1 | சுருள் பணியாளர் | வாரம் ஒன்றுக்கு 778.00 |
| 2 | பாவு சுற்றுபவர் | வாரம் ஒன்றுக்கு 889.00 |
| 3 | பாவு சுற்றும் உதவியாள் | வாரம் ஒன்றுக்கு 549.00 |
| 4 | பசையேற்றுபவர் | வாரம் ஒன்றுக்கு 701.00 |
| 5 | ஆவியில் வேகவைப்பவர் | வாரம் ஒன்றுக்கு 761.00 |
| 6 | மீள் பசையேற்றுபவர் | வாரம் ஒன்றுக்கு 616.00 |
| 7 | உருளை அழுத்துபவர் | வாரம் ஒன்றுக்கு 678.00 |
| 8 | கொதிகலன் கவனிப்பவர் | வாரம் ஒன்றுக்கு 593.00 |
| 9 | உருளை அழுத்தும் உதவியாள் | வாரம் ஒன்றுக்கு 593.00 |
| 10 | இழுப்பவர் மற்றும் முடியிடுபவர் இரண்டும் சேர்ந்து) | 1000 முடிகளுக்கு 17.50 |
| 11 | நெசவு நெய்பவரின் உதவியாள் | 23 தறிகளுக்கு 59.22 |
| 12 | சுத்தம் செய்பவர், எண்ணெயிடுபவர் (துனி ஆய்வு, போல்டிங், தாங்கிகள்) | நாளொன்றுக்கு 150.00 |
| 13 a. | பாவு பிணைத்தல், டெர்ரி / ஜேக்குவார்டு ரகம் கவனிப்பவர் | நாளொன்றுக்கு 160.00 |
| b. | 1500 முதல் 2000 இழைகள் உள்ள பாவுக்கு முதல் 1000 நூலுக்கு | |
| 14 | எழுத்தர் / மேலாள் | மாதமொன்றுக்கு 3762.00 |

**விளக்கங்கள்:**-மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியவீதங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

1. **அகவிலைப்படி**:

(i) அகவிலைப்படியானது, 2006ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 1982ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட 582 புள்ளிகள் ஆகும்). 582 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி நாளொன்றுக்கு 25 காசுகள் (இருபத்தைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

2. பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

3. மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு வாராந்திர ஊதியத்தை முதலில் ஏழால் வகுத்து பின் 30ஆல் பெருக்க வேண்டும்.

4. மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30ஆல் பெருக்க வேண்டும்.

5. நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

6. தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 39, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 29 ஜூலை 2013.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1958) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 05–08–2009 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2–ல் 261ஆம் மற்றும் 262 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/393/2009 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையினை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் தகரக் கொள்கலன்கள் தயாரிப்புத் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளைச் செய்கிற தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

*விவர அட்டவணை*

**தகரக் கொள்கலன்கள் தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* (1) | *பணிகள்/பணியாளர்களின் வகை* (2) | *மாதமொன்றுக்கு குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்* (3) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *மண்டலம்–A* | | *மண்டலம்–B* | | *மண்டலம்–C* | |
| | | *ரூ.* | *காசு* | *ரூ.* | *காசு* | *ரூ.* | *காசு* |
| 1 | நறுக்குதல் | 2921 | 00 | 2824 | 00 | 2824 | 00 |
| 2 | விளிம்புப் பட்டையிடுதல் / உருட்டுதல் / துளையிடுதல் / தறையாணியடித்தல் | 2921 | 00 | 2824 | 00 | 2824 | 00 |
| 3 | சூட்டிணைப்பு செய்தல் | 2921 | 00 | 2824 | 00 | 2824 | 00 |
| 4 | சோதனையிடல் / பரிசோதித்தல் | 2921 | 00 | 2824 | 00 | 2824 | 00 |
| 5 | அச்சிடல் | 2921 | 00 | 2824 | 00 | 2824 | 00 |
| 6 | சுத்தப்படுத்தல் / மெருகேற்றல் | 2921 | 00 | 2824 | 00 | 2824 | 00 |
| 7 | சிப்பம் கட்டுதல் | 2921 | 00 | 2824 | 00 | 2824 | 00 |
| 8 | உதவியாள் | 2721 | 00 | 2721 | 00 | 2721 | 00 |
| 9 | மேற்பார்வையாளர் | 3026 | 00 | 2921 | 00 | 2921 | 00 |
| 10 | மேலாளர் | 3227 | 00 | 3122 | 00 | 3122 | 00 |
| | **அலுவலகப் பணியாளர்கள்** | | | | | | |
| 1 | மேலாளர் | 3227 | 00 | 3122 | 00 | 3122 | 00 |
| 2 | கணக்கர் | 2824 | 00 | 2721 | 00 | 2721 | 00 |
| 3 | எழுத்தர் | 2824 | 00 | 2721 | 00 | 2721 | 00 |
| 4 | தட்டச்சர் | 2824 | 00 | 2721 | 00 | 2721 | 00 |
| 5 | பண்டகசாலைக் காப்பாளர் | 2824 | 00 | 2721 | 00 | 2721 | 00 |
| 6 | ஓட்டுநர் | 2824 | 00 | 2721 | 00 | 2721 | 00 |
| 7 | காவலாள் | 2721 | 00 | 2721 | 00 | 2721 | 00 |
| | வாளிகள், விசைக்குழாய்கள், பால் கலன்கள், பெட்டிகள், உருள்கலங்கள், குடம், நெல் அவிப்பான்களின் இணைப்புகள் முதலியவற்றைக் கைகளால் தயாரித்தல் | ரூ.110.00 (நாளொன்றுக்கு) | | ரூ.109.00 (நாளொன்றுக்கு) | | ரூ.106.00 (நாளொன்றுக்கு) | |

**விளக்கங்கள்:–** (1) மண்டலங்களின் வகைப்பாடு:–A, B மற்றும் C மண்டலங்களில் கீழ்க்காணும் பகுதிகள் அடங்கும்.

மண்டலம்—A—மாநகராட்சிகள் மற்றும் அனைத்து சிறப்புநிலை நகராட்சிகள்

மண்டலம்—B—இதர நகராட்சிகள்

மண்டலம்—C— A மற்றும் B மண்டலங்களில் குறிப்பிடப்படாத ஏனைய பகுதிகள்.

2. **அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்:–

(i) அகவிலைப்படியானது, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 1982ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட 475 புள்ளிகள் ஆகும்). 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி நாளொன்றுக்கு ரூ. 5.72 (ஐந்து ரூபாய் எழுபத்து இரண்டு காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**3.** பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

**4.** நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

**5.** மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30ஆல் பெருக்க வேண்டும்.

**6.** தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

/தமிழாக்கம்/

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண். 66, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 25 அக்டோபர் 2013.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் வெளியிடக் கருதியுள்ள அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவான இரண்டு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படுமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை–600 006–இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலம் அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவு அறிவிக்கை

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் 7–07–2010 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2–ல் 571ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/414/2010 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் உப்பளங்களில் பணிபுரிகிற பணியாளர் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்:—

## விவர அட்டவணை

### உப்பளங்களில் வேலைவாய்ப்பு

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகை* | *குறைந்த அளவு அடிப்படை ஊதியங்கள் ரூபாய் காசு.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | சுரண்டுதல் | நாளொன்றுக்கு ரூ. **185.00** |
| 2. | உப்பளத்திலிருந்து உலர்த்துகிற மேடைக்கு எடுத்துச் செல்லுதல் | |
| | (i) உத்தரவாதமளிக்கப்பட்ட குறைந்த அளவு அடிப்படை ஊதியங்கள் | நாளொன்றுக்கு ரூ. **182.00** |
| | (ii) செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் | |

| தொடர் எண் | பணியாளர்களின் வகை | குறைந்த அளவு அடிப்படை ஊதியங்கள் ரூபாய் காசு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (a) 45 மீட்டர் வரையிலான நீளத்திற்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு | ரூ. 27.72 |
| | (b) 45 மீட்டருக்கு மேற்பட்டு மற்றும் 105 மீட்டர் வரையிலான நீளத்திற்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு | ரூ.16.83 |
| | (c) 105 மீட்டர் நீளத்திற்கு மேற்பட்ட கூடுதலான ஒவ்வொரு 60 மீட்டர் நீளத்திற்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு | ரூ.16.83 |
| 3 | மராமத்து | நாளொன்றுக்கு ரூ. 182.00 |
| 4 | நீரேற்றுபவர் | நாளொன்றுக்கு ரூ. 183.50 |
| 5 | நீரேற்று இயந்திரத்தைக் கவனிப்பவர் (ஏவலாள்) | நாளொன்றுக்கு ரூ. 182.00 |
| 6 | மேஸ்திரி | மாதமொன்றுக்கு ரூ. 5389.00 |
| 7 | காவலாள் | மாதமொன்றுக்கு ரூ. 5135.00 |
| 8 | (i) டிராக்டர் ஓட்டுநர் (கிருஷி டிராக்டர் உட்பட)<br>(ii) நீரேற்று இயந்திர கம்மியர் (டீசல் அல்லது மின்சக்தியில் இயங்குவது)<br>(iii) உப்பை உடைக்கும் இயந்திரம் | மாதமொன்றுக்கு ரூ. 5389.00 |
| 9 | எழுத்தர் | மாதமொன்றுக்கு ரூ. 5389.00 |
| 10 | அகற்றுதல், எடையிடுதல் மற்றும் மூட்டைகளை நிரப்புதல் | 100 மூட்டைகளுக்கு ரூ. 185.81 |
| 11 | அகற்றுதல், எடையிடுதல் மற்றும் மூட்டைகளை நிரப்புதல், உப்பு மூட்டைகளைத் தைத்தல் மற்றும் எடுத்துச் செல்லுதல் (30 மீட்டர் நீளத்திற்கு 75 கிலோ கிராம் முதல் 80 கிலோ கிராம் வரை) | 100 மூட்டைகளுக்கு ரூ. 524.78 |
| 12 | பொதுவான பதவித்தரத்தினர் (மேற்சொன்ன எந்தவொரு பதவித்தரத்தின் கீழும் இடம் பெறாதவர்கள்) | நாளொன்றுக்கு ரூ. 182.00 என்ற உத்தரவாதம் அளிக்கப்பட்ட குறைந்த அளவு அடிப்படை ஊதியங்களுக்கு உட்பட்டு, செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் |

**விளக்கங்கள்:—**

1. **அகவிலைப்படி:**

மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 2001ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள் ஆகும்) 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி நாளொன்றுக்கு ரூ. 1.10 (ஒரு ரூபாய் மற்றும் பத்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) நுகர்வோர் விலைப்புள்ளிகளின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முதல் கணக்கீடு முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

**2.** பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

3 (i). நாள் ஊதிய வீதங்களைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

(ii). மாதாந்திர ஊதியவீதங்களைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30ஆல் பெருக்க வேண்டும்.

4. தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 73, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 29 அக்டோபர் 2013.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதிய பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த வரைவு அறிவிக்கை, இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவான இரண்டு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர், ஏதேனும் நபரிடமிருந்து வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை, சென்னை—600 006—இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, மற்றும் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 12—5—2010 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு—2இல், 252 மற்றும் 253 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/280/2010 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள, தமிழ்நாடு மாநிலத்தில் தச்சுத் தொழில் மற்றும் கருமான் தொழிலில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள பணி வகையினருக்கு/தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவில் குறிப்பிட்டுள்ளவாறு, இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**தச்சுத் தொழில் மற்றும் கருமான் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்.* | *பணியாளர்களின் வகை.* | *நாளொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்.* | | |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | | |
| | | *மண்டலம் A* | *மண்டலம் B* | *மண்டலம் C* |
| | | *ரூ. காசு.* | *ரூ. காசு.* | *ரூ. காசு.* |
| **1.** | **தச்சுத்தொழில் :** | | | |
| | **(A) உயரளவு பயிற்சி பெற்றவர்கள்** | | | |
| | 1. மேற்பார்வையாளர் | | | |
| | 2. மாதிரி படிமத் தயாரிப்பாளர் | | | |
| | 3. உள் அலங்கார வல்லுநர் | 374.00 | 331.00 | 308.00 |
| | 4. மெத்தை—திண்டு வேலை செய்பவர் | | | |
| | 5. மரம் செதுக்குபவர் | | | |

| தொடர் எண். (1) | பணியாளர்களின் வகை. (2) | நாளொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள். (3) | | |
|---|---|---|---|---|
| | | மண்டலம் A ரூ. காசு. | மண்டலம் B ரூ. காசு. | மண்டலம் C ரூ. காசு. |
| | **(B) பயிற்சி பெற்றவர்கள்** | | | |
| | 1. தச்சர் / மரக்கடைசல் பணியாளர் / தேய்த்து வழவழப்பாக்குதல் (மெல்லொட்டுப் பலகைப் பணிகள்) | 351.00 | 319.00 | 298.00 |
| | **(C) ஓரளவு பயிற்சி பெற்றவர்கள்** | | | |
| | 1. உதவி தச்சர்<br>2. பொதித்து வைப்பவர்<br>3. மெருகிடுபவர்<br>4. மேற்பூச்சு செய்தல் அழுத்துதல் (மெல்லொட்டுப் பலகைப் பணிகள்) | 331.00 | 308.00 | 287.00 |
| | **(D) பயிற்சி பெறாதவர்கள்** | | | |
| | 1. கற்பவர்<br>2. உதவியாள்<br>3. மெல்லொட்டுப் பலகைப் பணிகளில் பிறவகைப் பணியாளர்கள் | 298.00 | 287.00 | 276.00 |
| | **(E) மேற்சொன்னவற்றின்கீழ் இடம்பெறாத ஏனைய பிறவகையினர்** | 298.00 | 287.00 | 276.00 |
| **II.** | **கருமான் தொழில் :** | | | |
| | **(A) பயிற்சி பெற்றவர்கள்** | | | |
| | 1. மேற்பார்வையாளர்<br>2. பூட்டு தயாரிப்பவர்கள் உட்பட கருமான் தொழில்<br>3. பற்றவைப்பவர்<br>4. மென்னுருக்குப் பாத்திரங்கள் செய்பவர்<br>5. கால்நடைகளுக்கான லாடம் தயாரிப்பவர் உட்பட வேளாண் கருவிகள் செய்பவர் | 351.00 | 319.00 | 298.00 |
| | **(B) ஓரளவு பயிற்சி பெற்றவர்கள்** | | | |
| | 1. வெட்டுதல்<br>2. வளைத்தல்<br>3. வண்ணம் பூசுதல் | 331.00 | 308.00 | 287.00 |
| | **(C) பயிற்சி பெறாதவர்கள்** | 298.00 | 287.00 | 276.00 |
| | **(D) மேற்சொன்னவற்றின்கீழ் இடம்பெறாத ஏனைய பிற வகையினர்** | 298.00 | 287.00 | 276.00 |
| **III.** | **அலுவலகப் பணியாளர்கள் :** | | **(மாதமொன்றுக்கு)** | |
| | 1. மேலாளர் | 10,869.00 | 10,217.00 | 9,568.00 |
| | 2. கணக்காளர் / காசாளர்<br>3. எழுத்தர் / தட்டச்சர்<br>4. பண்டகசாலைக் காப்பாளர் | 10,002.00 | 9,022.00 | 8,379.00 |
| | 5. அலுவலக உதவியாளர்<br>6. காவலாள் | 8,702.00 | 8,266.00 | 8,049.00 |
| | 7. பெருக்குபவர் /துப்புரவுத் தொழிலாளர்<br>8. மேற்சொன்னவற்றின்கீழ் இடம்பெறாத ஏனைய பிற வகையினர் | 8,049.00 | 7,834.00 | 7,615.00 |

**விளக்கங்கள்:**—(1) **மண்டலங்களின் வகைப்பாடு:—** A, B மற்றும் C மண்டலங்களில் கீழ்க்காணும் பகுதிகள் அடங்கும்—

மண்டலம்—A : மாநகராட்சிகள் மற்றும் அம்பத்தூர் நகராட்சி

மண்டலம்—B : அம்பத்தூர் நகராட்சி நீங்கலாக அனைத்து நகராட்சிகள்

மண்டலம்—C : ஏனைய பகுதிகள்

**அகவிலைப்படி:— (2)** மேலே நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை ஊதியங்களுடன், கீழே குறிப்பிடப்பட்டவாறு அகவிலைப்படி பணியாளர்களுக்கு வழங்கப்படும்.

(i) அகவிலைப்படியைக் கணக்கிடுவதற்காக, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண் 161 அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்படும். (அதாவது 2001 = 100 என்பதன் அடிப்படையில்) 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிகளுக்கும் மாதமொன்றுக்கு ரூ. 47.25 (ரூபாய் நாற்பத்தேழு மற்றும் இருபத்தைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) நுகர்வோர் விலைப்புள்ளிகளின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர் நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) ஒரே தன்மையுடைய பணியை செய்யும்போது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) நாள் ஊதிய வீதங்களைக் கணக்கிட, மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(5) மாதாந்திர ஊதியங்களைக் கணக்கிட, நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(6) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில் எல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 263, தொழிலாளர் வேலைவாய்ப்பு (J2)த் துறை, 13 நவம்பர் 2013.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியிலும் மேற்சொன்ன சட்டத்தின் 9 ஆம் பிரிவின்படியும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், உணவு சமைக்கும் தொழிலில் வேலைவாய்ப்புக்கான குறைந்தளவு ஊதிய வீதங்களைத் திருத்தியமைப்பது தொடர்பாக, விசாரணைகள் நடத்தி, மாநில அரசுக்கு ஆலோசனை அளிப்பதற்காக பின்வரும் உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்றை இதனால் நியமிக்கிறார்.

**தனிப்பட்ட நபர்கள்:**

| | | | |
|---|---|---|---|
| (1) | தொழிலாளர் நலத்துறை துணை ஆணையாளர்—II, சென்னை | .. | தலைவர் |
| (2) | தொழிலாளர் ஆய்வாளர், திருவள்ளூர் | .. | செயலாளர் |
| (3) | திரு. வி. மலைராஜ்,<br>புள்ளியியல் உதவி இயக்குநர்,<br>பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை,<br>5, பாஸ்கர் வளாகம், பெசன்ட் சாலை<br>சின்ன சொக்கிகுளம்<br>மதுரை—2 | .. | உறுப்பினர் |

**வேலையளிப்பவரின் பிரதிநிதிகள்:**

| | | | |
|---|---|---|---|
| (1) | திரு. ஏ. மணிகண்டன்,<br>ஸ்ரீ மதுரம் ஓட்டல்,<br>9H, வடக்கு ஹைகிரவுண்ட் சாலை,<br>பாளையங்கோட்டை. | .. | உறுப்பினர் |
| (2) | திரு. எம். பெரியசாமி,<br>எண். 35, மலையடிவாரம் தெரு,<br>திருச்செங்கோடு. | .. | உறுப்பினர் |
| (3) | திருமதி எம். மாதேஸ்வரி<br>25G, புதிய எண். 40,<br>செம்படவர் மடம்,<br>மலையடிவாரம் தெரு,<br>திருச்செங்கோடு. | .. | உறுப்பினர் |

**தொழிலாளர்களின் பிரதிநிதிகள்:**

| | | | |
|---|---|---|---|
| (1) | திரு. பி. ராமர்,<br>அண்ணா தொழிற்சங்கப் பேரவை,<br>5/35/155, அஞ்சல் காலனி,<br>திருக்குமரன் நகர்,<br>பாளையம்பட்டி அஞ்சல்,<br>அருப்புக்கோட்டை,<br>விருதுநகர் மாவட்டம். | .. | உறுப்பினர் |
| (2) | திரு. எல். சுந்தரராஜன்,<br>மாநிலச் செயலாளர்,<br>இந்திய தொழிற்சங்க மையம், (CITU),<br>52, குக்ஸ் சாலை,<br>ஓட்டேரி, பெரம்பூர்,<br>சென்னை—600 012. | .. | உறுப்பினர் |
| (3) | திரு. எம். எஸ். மணி அய்யர்,<br>தமிழ்நாடு சமையல் கலை தொழிலாளர் முன்னேற்ற சங்கம்,<br>7/3, பெருமாள் கோயில் தெரு,<br>இலஞ்சி, தென்காசி வட்டம்,<br>திருநெல்வேலி மாவட்டம். | .. | உறுப்பினர் |

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 89, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 11 டிசம்பர் 2013.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவான இரண்டு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படுமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை—600 006 இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலம் அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 12–05–2010ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2–இல் 251 மற்றும் 252ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/277/2010ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் மருத்துவம் மற்றும் விற்பனை பிரதிநிதிகள் பணியில் பணியமர்த்தப்பட்டுள்ள பணியாளர் வகையினருக்கு, கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர் வகையினருக்கு, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்களை, இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**மருத்துவம் மற்றும் விற்பனைப் பிரதிநிதிகள் பணியில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகைகள்.* | *மாதமொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* *(ரூ. காசு.)* |
| 1 | மருந்துப்பொருள்கள் தயாரிப்பு அல்லது விற்பனைப் பிரிவுகளில் மருத்துவம் மற்றும் விற்பனை பிரதிநிதிகள் | 8166.00 |
| 2 | மருந்துப் பொருள்கள் மொத்தவிலை அல்லது விநியோகப் பிரிவுகளில் விற்பனையாளர்கள் | 7017.00 |

**விளக்கங்கள்: (1) அகவிலைப்படி:**

மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன், பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் ––– விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி திங்கள் ஒன்றுக்கு ரூ 43.55 (நாற்பத்து மூன்று ரூபாய் ஐம்பத்தைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு,, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**2.** பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

**3.** நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, மாதாந்திர ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

**4.** தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

/தமிழாக்கம்/

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண். 92, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 12 டிசம்பர் 2013.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவான இரண்டுமாதங்கள் முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படுமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை—600 006 இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலம் அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 2—02—2005ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2—இல் 58 முதல் 59 வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/98/2005ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் தையல் தொழிலில் பணியில் அமர்த்தப்பட்டுள்ள, கீழேயுள்ள விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர் வகையினருக்கு, அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்களை, இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**தையல் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொழிலாளர் வகைகள்* (1) | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு)* (2) | | |
|---|---|---|---|
| | *மண்டலம்* A | *மண்டலம்* B | *மண்டலம்* C |
| | *ரூ. காசு.* | *ரூ. காசு.* | *ரூ. காசு.* |
| **(A) தையல்** | | | |
| (1) வெட்டுபவர் | 5789.00 | 5639.00 | 5511.00 |
| (2) இயந்திரம் இயக்குபவர்/தையற்காரர் | 5639.00 | 5511.00 | 5383.00 |
| (3) காஜா தைப்பவர் | 5256.00 | 5128.00 | 5000.00 |
| (4) பெட்டி போடுபவர் | 5256.00 | 5128.00 | 5000.00 |
| **(B) ஏற்றுமதி ஆடைகள் தயாரிப்பு** | | | |
| (1) உற்பத்தி மேலாளர் | 5959.00 | 5746.00 | 5575.00 |
| (2) கண்காணிப்பாளர் | 5789.00 | 5639.00 | 5511.00 |
| (3) (i) வெட்டுபவர் மற்றும் குறியீடு செய்பவர், நிலை—I | 5789.00 | 5639.00 | 5511.00 |
| (ii) வெட்டுபவர் மற்றும் வடிவமைப்பு செய்பவர், நிலை—II | 5639.00 | 5511.00 | 5383.00 |
| (4) தையற்காரர்/இயந்திரம் இயக்குபவர், நிலை—I, | 5639.00 | 5511.00 | 5383.00 |
| நிலை—II | 5469.00 | 5341.00 | 5213.00 |
| (5) சீராக்குபவர் | 5256.00 | 5128.00 | 5000.00 |
| (6) பொத்தான் மற்றும் காஜா தைப்பவர் | 5256.00 | 5128.00 | 5000.00 |
| (7) சோதனையிடுபவர், நிலை—I | 5789.00 | 5639.00 | 5511.00 |
| நிலை—II | 5639.00 | 5511.00 | 5383.00 |
| (8) சலவை உதவியாள் | 5256.00 | 5128.00 | 5000.00 |
| (9) பெட்டி போடுபவர் அல்லது அழுத்தபவர் நிலை—I | 5362.00 | 5234.00 | 5106.00 |
| நிலை—II | 5256.00 | 5128.00 | 5000.00 |

| | | | |
|---|---|---|---|
| (10) சிப்பமாக்குபவர் | | | |
| (11) அடுக்கும் (உதவியாளர்கள்) | | | |
| (12) உதவியாளர் (அனைத்து வகைகள்) | 5256.00 | 5128.00 | 5000.00 |
| (13) பயிற்சி பெறுபவர்—தொழில் பழகுநர் | | | |
| (14) மேற்சொன்ன இடங்களில் வராத ஏனைய யாதொரு வகையினர்கள் | | | |
| **(C) நிருவாகப் பணியாளர்கள்** | | | |
| (தையல் மற்றும் ஏற்றுமதி ஆடைகள் தயாரிப்பு இரண்டுக்கும்) | | | |
| (1) மேலாளர் (கணக்குகள்/கப்பல் போக்குவரவு/ கொள்முதலு/விற்பனைகள் | 5959.00 | 5746.00 | 5575.00 |
| (2) கணக்காளர்/காசாளர்/எழுத்தர்/தட்டச்சர் | 5426.00 | 5277.00 | 5128.00 |
| (3) பண்டக காப்பாளர் | 5362.00 | 5213.00 | 5106.00 |
| (4) ஓட்டுநர் | 5533.00 | 5384.00 | 5234.00 |
| (5) நேரக் காப்பாளர் | 5426.00 | 5277.00 | 5128.00 |
| (6) பாதுகாவலர்/காவலாள் | | | |
| (7) பெருக்குபவர் | 5256.00 | 5128.00 | 5000.00 |

**விளக்கங்கள்:**—(1) மண்டலங்களின் வகைப்பாடு:— பின்வருமாறு, மண்டலங்கள் வகைப்படுத்தப்படும்.

மண்டலம் :— A, B மற்றும் C —இல் பின்வரும் பகுதிகள் அடங்கும்.

மண்டலம்—A : அனைத்து மாநகராட்சிகள்

மண்டலம்—B : அனைத்து நகராட்சிகள்

மண்டலம்—C : மண்டலம்—A மற்றும்—B—இன் கீழ் வராத ஏனைய பகுதிகள்

**விளக்கங்கள் (2) அகவிலைப்படி:—** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி திங்கள் ஒன்றுக்கு ரூ 31.05 (முப்பத்தொன்று ரூபாய் ஐந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**2.** பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

**3.** நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, மாதாந்திர ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

**4.** தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.